**கடன் அட்டை பயன்பாடு**

**A.P. (DIR Series) சுற்றறிக்கை எண்.53 (ஜுன் 27, 2002)**

பாரத ரிசர்வ் வங்கி
அந்நியச் செலாவணி கட்டுப்பாட்டுத்துறை
மைய அலுவலகம்
மும்பை 400 001

ஜுன் 27, 2002

A.P.(DIR Series) சுற்றறிக்கை எண் 53

<u>கடன் அட்டை பயன்பாடு</u>

**அங்கீகரிக்கப்பட்ட அந்நியச் செலாவணி வர்த்தகர் அனைவருக்கும்**

அன்புடையீர்,

அக்டோபர் 30, 2000 தேதியிடப்பட்ட A.P.(DIR Series) சுற்றறிக்கை எண்.19ல் பாரா 3ல் சொல்லியுள்ளபடி பணம் என்ற சொல் மற்றவற்றிற்கிடையே கடன் அட்டை, தானியங்கி பணம் வழங்கு அட்டை மற்றும் பற்று அட்டை இவற்றையும் குறிக்கும். அதோடு FEMA ல் சொல்லப்பட்ட விதிகள், கட்டுப்பாடுகள், கட்டளைகள் அனைத்தும் இவற்றிற்கும் பொருந்தும். இதை அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கவனத்திற்குக் கொண்டு செல்கிறோம்.

2. கீழ்க்கண்டவை தெளிவாக்கப்படுகிறது.

i. **EXIM** (ஏற்றுமதி இறக்குமதி) திட்டத்தின் கீழ் அனுமதியளிக்கப்பட எதுவும் கணினியின் மூலம் பெறக்கூடிய மென்பொருள், புத்தக இறக்குமதி மற்றும் இணையதள வசதியுடன் அயல்நாட்டு நாணயம் வாங்கிச் செலுத்திப் பயன்பெற பன்னாட்டு கடன் அட்டைகள் பயன்படுத்தப்படலாம்.

ii. தடைவிதிககப்பட்ட விஷயங்கள், லாட்டரி, பத்திரிக்கைகள், சூதாட்டம் சார்ந்த விஷயங்கள் "மீண்டும் அழைக்க வசதிகள்" போன்றவற்றிற்கு அயல்நாட்டு நாணயம் பெற இணையதளம் மூலம் பன்னாட்டுகடன் அட்டைகள் பயன்படுத்தப்படக்கூடாது.

iii. இணையதளம் மூலம் பன்னாட்டுகடன் அட்டைகள் பயன்படுத்த மொத்தத் தொகைக்கான உச்சவரம்பு ஏதுமில்லை.
அங்கீகரிக்கப்பட்ட வணிகரிடமிருந்து அயல்நாட்டு நாணயம் பெற அனுமதியளிக்கப்பட எந்த ஒரு நோக்கத்திற்காகவும் பற்று அட்டை மற்றும் தானியங்கி பணம் வழங்கு அட்டை இந்தியாவில் பயன்படுத்தப்படலாம்.

3. ரிசர்வ் வங்கி அறிவிப்பு எண் 14/2000 RB 2000 ஆண்டு மாதம் 3ம் தேதியிடப்பட்ட தின் விதிமுறை 4ல் உள்ள கருத்து (iii) ஐ, அங்கிகரிக்கப் பட்ட அந்நியச் செலாவணி வர்த்தகர்கள் கவனிப்பார்களாக. இதன்படி, அயல்நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட சிரக்கிற்கு / சேவைக்கு ஈடான தொகையை, இறக்குமதியாளரின் கையெழுத்திட்டப்பட்ட கட்டண்ச் சீட்டிற்கு ஈடாக, கடன் அட்டை சேவை செய்யும் இந்தியாவிலுள்ள வங்கியிடமிருந்து ஏற்றுமதியாளர் ஒருவர், இந்திய ரூபாயில் பணம் பெற்றுக்கொள்வது அனுமதிக்கப்பட்ட ஒரு முறையாகும். இறக்குமதியாளர் இந்தியாவிற்கு வருகை தற்போது இறக்குமதிக்கான தொகையைத் தர முன் வ்ததாக இதை எடுத்துக்கொண்டு இத்தகைய பணபட்டுவாடாவிற்கு அனுமதி வழங்கப் படுகிறது. இறக்குமதியாளர் இந்தியாவிற்கு வருகை தந்தாலும், தராவிட்டாலும் அவருடைய கடன் அட்டையின் பேரில் பற்றுவைத்து இந்தியாவிலிருந்து அவருக்கு செய்யப்பட்ட ஏற்றுமதிக்கான தொகையைப் பெற்றிட அங்கிகரிக்கப் பட்ட வணிகர்களுக்கு அனுமதி வழங்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. அதன்படி இறக்குமதியாளரின் கடன் அட்டையைப் பற்றுவைத்து, அதற்குரிய தொகையை அந்நிச் செலாவணியில் கடன் அட்டை வழங்கி அல்லது நிறுனத்திடம் இருந்து மீண்டும் பெறும் வகையில், அயல்நாட்டுக்கு செய்யப்பட்ட ஏற்றுமதித் தொகையினை அங்கிகரிக்கப்பட்ட வணிகர்கள் பெற்றுக்கொள்ளலாம் என்பது தெளிவுபடுத்தப்படுகிறது.

4. தத்தம் குழுவைச் சார்ந்த முகவர்களுக்கு இந்த சுற்றறிக்கையின் கருத்துக்களை எடுத்து செல்லும்படி அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இந்தச் சுற்றறிக்கையில் அடங்கியுள்ள கட்டளைகள் யாவும் FEMA 1999 (42 of 1999) ன் சட்டப்பிரிவு எண் 10(4) மற்றும் சட்டப்பிரிவு எண் 11(1)ன் கீழ் வெளியிடப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

கிரேஸ் கோஷி
தலைமைப் பொது மேலாளர்